**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022**
**வழக்கு சாட்சி – அ.சா. 7 (பட்டியல் சாட்சி –7).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. குமார். | ஜாதி | |
| தந்தை பெயர் | செல்லம். | தொழில் | தச்சு வேலை. |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 39/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.04.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, தச்சு வேலை செய்து வருகிறேன். கடந்த 24.04.2018 ஆம் தேதியன்று இரவு 08.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தேன். சுரேஷ் என்பவரின் வீட்டில் சத்தம்கேட்டது. நான் சென்று பார்த்தேன். ஆஜர் 1–வது எதிரியான மருதுபாண்டி மது அருந்திவிட்டு சுரேஷ் வீட்டின் வாசலில் நின்று கையில் கல் மற்றும் அரிவாளுடன் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். 1–வது எதிரி, சுரேஷ் வீட்டுக் கதவின்மேல் கல்லால் எறிந்தார். நான் எதிரியை செல்லுமாறு கூறிவிட்டுச் சென்றவிட்டேன். தற்போது, என்னிடம் காண்பிக்கப்படும் சேத மதிப்புச் சான்று நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த சேத மதிப்புச் சான்று அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்குத் தெரியாது.

**<u>சாட்சியைப் பகுதியாக பிறழ் சாட்சியாகப் பாவிக்ககோரி அரசுத் தரப்பில் அனுமதி கோரியதன்பேரில், சாட்சியைப் பகுதியாக பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது:–</u>**

கடந்த 24.04.2018 ஆம் தேதியன்று சுரேசின் வீட்டுக் கதவு சேதமாகியிருந்தததை சரிசெய்து கொடுத்து, அதற்கான கூலியாக ரூ.100/– ஐப்

பெற்றுக்கொண்டதாக நான் எழுதிக்கொடுத்து, நான் கையெழுத்துச் செய்தேன் என்றால், சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் கடை வைத்து தச்சு வேலை செய்து வருகிறேனா? என்றால், இல்லை. அ.சா.2 சுரேஷ் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால், அவர் உறவினர் அல்ல, பக்கத்துவீட்டுக்கார் ஆவார். சம்பவத்தை நான் நேரடியாகப் பார்த்தேன் என்றால், பார்த்தேன். சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் வேறு யாரும் இருந்தார்களா? என்றால், சுரேசின் அப்பா, அம்மா, நான், என் மனைவி ஆகியோர்கள் இருந்தோம். நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றாலும், சம்பவ சமயத்தில் நான் சம்பவயிடத்தில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தார்களா? என்றால், விசாரித்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால், 20 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். நான் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லும் இரசீதில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா? என்றால், இல்லை. மேற்படி இரசீதில் கூலியாக ரூ.100/– பெற்றுக் கொண்டதாக உள்ளது என்று சொன்னால், சரிதான். போலீசார் விசாரணையில் நான் சம்பவத்தைப் பார்த்ததாகக் கூறியுள்ளேனா? என்றால், கூறியுள்ளேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.27 18:43:45 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
தேனி.